சட்டப்பேரவைத் தேர்தல் – 2026

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் - காணொலி மூலம் அனைத்துத் தொகுதிகளிலும் உள்ள கழக நிர்வாகிகளோடு கலந்துரையாடல்!

தலைமைக் கழக அறிவிப்பு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அனைத்து தொகுதிகளிலும் உள்ள கழக நிர்வாகிகளுடன் 03.04.2026 (வெள்ளிக்கிழமை) நண்பகல் 12.00 மணிக்கு காணொலி மூலம் கலந்துரையாடுகிறார்.

அதுபோது, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியளவிலும் ஓரிடத்தில் தக்க ஏற்பாடுகளைச் செய்யும்படி மாவட்டச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள், கழக வேட்பாளர்கள், பகுதி – நகரம் – ஒன்றியம் வட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தொகுதிக்கான வேட்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

காணொலி இணைப்பு தலைமைக்கழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18.
நாள் : 31.03.2026.

தலைமைக் கழகம்
தி.மு.க.

இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஆர். ஜெகதீஸ் ஏற்பாட்டில் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் முன்னிலையில் சட்டப்பேரவை தலைவர் வெற்றி வேட்பாளர் மு.அப்பாவு அவர்களை ஆதரித்தும் அ.தி.மு.க. வார்டு செயலாளர் அருள் தலைமையில் அ.தி.மு.க.நாம் தமிழர் கட்சி, த.வெ.க.ஆகிய கட்சிகளில் இருந்து 15 பெண்கள் உள்பட 50 க்கும் மேற்பட்டோர் அக்கட்சிகளிலிருந்து விலகி கழகத்தில் இணைந்தனர். உடன் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், ஜோசப் பெல்சி, அலெக்ஸ் அப்பாவு உள்பட பலர் உள்ளனர்.

தேனி தெற்கு மாவட்டம் கம்பம் நகரச் செயலாளர்கள் வீரபாண்டியன், பால்பாண்டி ராஜா ஆகியோர் ஏற்பாட்டில் கழக வேட்பாளர் தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்தார். உடன் மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் பாண்டியன், வார்டு செயலாளர்கள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர், இராமநாதபுரம் சட்டமன்ற வேட்பாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், முதுகுளத்தூர் சட்டமன்ற வேட்பாளர் அமைச்சர்.ஆர். எஸ். ராஜகண்ணப்பன், பரமக்குடி சட்டமன்ற வேட்பாளர் கே. கதிரவன், மூவரும் கமுதி பசும்பொன்னில் அமைந்துள்ள தேசிய தலைவர் முத்துராமலிங்க தேவர் அவர்கள் நினைவு ஆலயத்தில் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். இந்நிகழ்ச்சியில், நவாஸ் கனி எம்.பி. சத்தியமூர்த்தி, முருகவேல், சுப. த. திவாகரன், கமுதி வி. வாசுதேவன், மனோகரன், சண்முகநாதன், பாலமுருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி தொகுதி கழக வேட்பாளர் ஆ. மகாராஜன் ஆண்டிபட்டி சட்டமன்றதொகுதிக்கு உட்பட்ட திமிரச நாயக்கனூர் ராஜகோபாலன்பட்டி ஆகிய கிராமங்களில் கழகஆட்சியில் செய்த சாதனைகளையும் தேர்தல் வாக்குறுதிகளையும் விளக்கி பேசி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார் உடன் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஜிகே .பாண்டியன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் வேல்மணி, பாண்டியன், அசுஷியா, ராம்குமார், விளையாட்டு மேம்பாட்டு அணி ஒன்றிய அமைப்பாளர் சுப்புலாபுரம் கார்த்தி, பேரூர் செயலாளர் சரவணன், சுப்புலாபுரம் கிளை செயலாளர் செல்லப் பாண்டி மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் 2026

தி.மு.க. தலைமையிலான

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

கழக துணைப் பொதுச்செயலாளர் **கனிமொழி கருணாநிதி** எம்.பி. அவர்களின்

தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்

தலைமைக் கழக அறிவிப்பு!

தேதி	நேரம்	மாவட்டம்	சட்டமன்றத் தொகுதி
2.4.2026	காலை 11 மணி	சிவகங்கை	மானாமதுரை
”	மாலை 4.00 மணி	மதுரை தெற்கு	திருப்பரங்குன்றம்
”	மாலை 6.00 மணி	மதுரை மாநகர்	மதுரை தெற்கு
”	இரவு 8.00 மணி	மதுரை மாநகர்	மதுரை மத்திய
3.4.2026	காலை 11 மணி	திண்டுக்கல் கிழக்கு	நிலக்கோட்டை
”	மாலை 4.00 மணி	”	ஆத்தூர்
”	மாலை 6.00 மணி	திண்டுக்கல் மேற்கு	ஒட்டன்சத்திரம்
”	இரவு 8.00 மணி	திண்டுக்கல் கிழக்கு	திண்டுக்கல்
4.4.2026	காலை 11.00 மணி	திருச்சி தெற்கு	மணப்பாறை
”	மாலை 4.00 மணி	திருச்சி மத்திய	திருவரங்கம்
”	மாலை 6.00 மணி	கரூர்	குளித்தலை
”	இரவு 8.00 மணி	”	கிருஷ்ணராயபுரம்
5.4.2026	காலை 11.00 மணி	திருப்பூர் கிழக்கு	காங்கேயம்
”	மாலை 4.00 மணி	திருப்பூர் மத்திய	பல்லடம்
”	மாலை 6.00 மணி	கோவை தெற்கு	சூலூர்
5.4.2026	இரவு 8.00 மணி	கோவை வடக்கு	கவுண்டம்பாளையம்
6.4.2026	மாலை 4.00 மணி	சென்னை தெற்கு	மதுரவாயல்
”	மாலை 5.00 மணி	சென்னை கிழக்கு	அம்பத்தூர்
”	மாலை 6.00 மணி	சென்னை வடகிழக்கு	மாதவரம்
”	மாலை 7.00 மணி	சென்னை வடகிழக்கு	திருவொற்றியூர்
”	இரவு 8.00 மணி	சென்னை கிழக்கு	திரு.வி.க.நகர்
7.4.2026	காலை 10.00 மணி	திருவள்ளூர் மேற்கு	திருத்தணி
”	பகல் 12.00 மணி	இராணிப்பேட்டை	சோளிங்கர்
”	மாலை 4.00 மணி	திருவண்ணாமலை வடக்கு	ஆரணி
”	மாலை 6.00 மணி	திருவண்ணாமலை தெற்கு	போளூர்
”	இரவு 8.00 மணி	”	கலசப்பாக்கம்
8.4.2026	காலை 10.00 மணி	கள்ளக்குறிச்சி தெற்கு	ரிஷிவந்தியம்
”	பகல் 12.00 மணி	கள்ளக்குறிச்சி வடக்கு	சங்கராபுரம்
”	மாலை 4.00 மணி	சேலம் கிழக்கு	ஆத்தூர்
”	மாலை 6.00 மணி	சேலம் மத்திய	சேலம் தெற்கு
”	இரவு 8.00 மணி	”	சேலம் மேற்கு
9.4.2026	காலை 10.00 மணி	நாமக்கல் மேற்கு	திருச்செங்கோடு
”	பகல் 12.00 மணி	”	குமாரபாளையம்
”	மாலை 4.00 மணி	ஈரோடு மத்திய	பவானி
”	மாலை 6.00 மணி	ஈரோடு தெற்கு	ஈரோடு கிழக்கு
”	மாலை 7.00 மணி	ஈரோடு தெற்கு	மொடக்குறிச்சி

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 31.03.2026

தலைமைக் கழகம்
தி.மு.க.

மதுரை தெற்கு மாவட்டம் திருப்பரங்குன்றம் தொகுதி கழக தேர்தல் பணிமனையினை மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் திருப்பரங்குன்றம் தொகுதி கழக வேட்பாளரும், மகளிர் அணி செயலாளருமான கிருத்திகா தங்க பாண்டியன் முன்னிலையில் திறந்து வைத்தார். உடன் தொகுதி பொறுப்பாளர்கள் சிவகாசி வனராஜா, டிஸ்கோ அலாவுதீன், கழக நிர்வாகிகள் ஏர்போர்ட் பாண்டியன், விமல், பெரியசாமி, பி.எஸ்.என்.எல். செல்வம், ஈஸ்வரன், உசிலை சிவா, கிருஷ்ண பாண்டியன், தங்கப்பாண்டியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் கழகத்தினர் என திரளானோர் பங்கேற்றனர்.

சாதனைகளின் மறுபெயர் தி.மு.க.! சாதனைச் செல்வர் ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்!